


## சாகித்ய அகாடமி- சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் இணைந்து

# பம்மல் சம்பந்தரின் 150-ம் ஆண்டு விழா கருத்தரங்கம்

தஞ்சாவூர், நவ.10—

சாகித்ய அகாடமி மற்றும் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் கலை, அறிவியல், மானிடவியல் மற்றும் கல்வியியல் துறை ஆகியவை இணைந்து பம்மல் சம்பந்த முதலியாரின் 150—ம் ஆண்டு விழா கருத்தரங்கை நடத்தியது.

புல முதன்மையர் பேராசிரியர் உமா மகேஸ்வரி வாழ்த்துரை வழங்கினார். எந்திர பொறியியல் துறையின் புல முதன்மையர் சிவ புகழேந்தி தலைமையுரை ஆற்றினார். துறையின் துணை புல முதன்மையர் பேராசிரியர் சாந்தி தொடக்க உரை ஆற்றினார்.

தமிழ்த்துறை பேராசிரியர் பழனி 19—ம் நூற்றாண்டின் நாடக வரலாற்று ஆராய்ச்சியாளராகவும், நடிப்பு முறை இயல் கோட்பாட்டாளராகவும் திகழ்ந்த பம்மல் சம்பந்த னாரின் பெருமை களை எடுத்துரைத்தார்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் ராஜா ரவிவர்மன், சரவணன் வேலு, அருணகிரி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இசை துறை தலைவர் கற்பகம், ஆழி வெங்கடேசன், திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் தமிழ்த் துறை தலைவர் பார்த்திபராஜா, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கார்த்திகேயன் ஆகியோர் ஆய்வு கட்டுரைகள் வழங்கினர்.

தொடர்ந்து, பம்மல் சம்பந்தனார் குறித்த நாடக அரங்கேற்றம் நடைபெற்றது. நிகழ்ச்சியை தமிழ்த் துறை பேராசிரியர் ஜெயஸ்ரீ ஒருங்கிணைத்தார். முடிவில் நதியா நன்றி கூறினார்.